# இயல் 3 துணைப்பாடம்
# அகழாய்வுகள்.

முன்னுரை:

மனிதன் தோன்றிப் பல்லாயிரம் ஆண்டுகள் கடந்துவிட்டன. பண்பாட்டு அளவில் சிறந்த வாழ்வை வெளிப்படுத்திய தமிழர்களின் வரலாற்றை அறிந்துகொள்ள தமிழகத்தின் தொன்மையான பகுதிகளை அகழாய்வு செய்கிறோம். மேலும், அகழாய்வு குறித்த செய்திகளை இக்கட்டுரையில் காண்போம்.

முதல் அகழாய்வு:

நமது வரலாறு மிக நீண்டது. 150 ஆண்டுகளுக்கு முன்னால் 1863 ஆம் ஆண்டு ராபர்ட் புரூஸ்புட் என்னும் தொல்லியல் அறிஞர் சென்னைப் பல்லாவரம் செம்மண் மேட்டுப் பகுதியில் எலும்பையும் கற்கருவியையும் கண்டுபிடித்தார். . அரிக்கமேடு அகழாய்வில் ரோமானியர்களின் பழங்காசுகள் கோவையில் கண்டுபிடிக்கப்பட்டன. அரிக்கமேடு அகழாய்வில் ரோமானிய மட்பாண்டங்கள் கிடைத்தன. அதனால் ரோமானியர்களுக்கும் தமிழருக்கும் இருந்த வணிகத் தொடர்பு உறுதிப்படுத்தப்பட்டது.

கீழடி அகழ்வாராய்ச்சி:

மதுரை நகருக்கு அருகே உள்ள கீழடி என்னுமிடத்தில் நடத்தப்பட்ட அகழாய்வில் சுடுமண் பொருட்கள், உலோகப் பொருட்கள், முத்துகள், கிளிஞ்சல் பொருட்கள், மான் கொம்புகள், சோழிகள், கிண்ணங்கள், துளையிடப்பட்ட பாத்திரங்கள், ரத்தினக்கல் வகைகள், பழுப்பு, கறுப்பு பானைகள், சதுரங்கக் காய்கள், தானியங்களைச் சேகரிக்கும் கலன்கள், செம்பு, சங்கு வளையல்கள், எலும்பினால் ஆன கூர் முனைகள், தமிழ் எழுத்துகள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள், கற்கருவிகள், நீர் சேகரிக்கும் பெரிய மட்கலன்கள், சிறிய குடுவைகள், உறைக்கிணறுகள், சுடுமண் ஓடுகள் போன்றவை கீழடி தொல்லியல் ஆராய்ச்சியில் கிடைத்தன.

முதுமக்கள் தாழிகள்:

பழங்காலத்தில் வயதாகி இறந்தவர்களைப் பானையில் வைத்து புதைப்பர். அந்தப் பானைக்கு முதுமக்கள் தாழி என்பது பெயர். 1914 ஆம் ஆண்டு ஆதிச்ச நல்லூரில் நடத்தப்பட்ட ஆய்வில் ஏராளமான முதுமக்கள் தாழிகள் கண்டுபிடிக்கப்பட்டன.

தொல்லியலின் அவசியம்:

நாம் கடந்த காலத்தை ஆராய்ந்து அறிந்து கொண்டால்தான் நிகழ்காலத்தை செம்மைப்படுத்திக் கொள்ள முடியும். நமது முன்னோர்கள் வாழ்ந்து பெற்ற அனுபவங்களை வகைப்படுத்தி தொகுத்துப் பார்ப்பதற்குத் தொல்லியல் ஆய்வு மிகவும் அவசியமாகும்.

முடிவுரை:

நமது பண்பாட்டின் மேன்மைகளை இன்றைய தலைமுறையினர் பின்பற்றி சிறப்பாக வாழ்வதற்கு அகழாய்வு துணை நிற்கின்றது. ஆகவே, அகழாய்வைத் தொடர்வோம்; தொன்மை வரலாற்றை மீட்போம்.